# சட்ட நடவடிக்கை எடுக்க நினைத்தோம்

# பல ஆண்டுகள் போராடினோம்

## பிரதமர் இன்றி இது சாத்தியமாகியிருக்காது

# மடானி பள்ளிவாசல் அடிக்கல் நாட்டு விழாவில் ஃபாரோஸ் ஜேக்கல்




கோலாலம்பூர், மார்ச் 28-

தங்களுக்கு சொந்தமான நிலத்தில் சுமார் 11 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தின் நிர்வாகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆரம்பத்தில் தாங்கள் திட்டமிட்டிருந்ததாக ஜேக்கல் குழுமம் நேற்று அம்பலப்படுத்தியது.

அந்த இடத்தில் பள்ளிவாசல் நிர்மாணிப்பை தொடங்குவதற்கு 11 ஆண்டுகளாக தாங்கள் காத்திருந்ததாக ஜேக்கல் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் டத்தோ ஸ்ரீ முகமட் ஃபாரோஸ் முகமட் ஜெக்கல் கூறினார்.

எனினும், கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோ ஸ்ரீ டாக்டர் ஸலேஹா முஸ்தாபாவின் ஆலோசனையின் பேரில் சட்ட நடவடிக்கை எடுக்கும் முடிவை கைவிட்டதாக அவர் சொன்னார்.

நாங்கள் 11 ஆண்டுகள் காத்திருந்தோம். ஆலய நிர்வாகத்திற்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கவிருந்தோம். ஆனால் டாக்டர் ஸலிஹா எங்களை தடுத்து நிறுத்தினார். அது ஒரு மிகப்பெரிய இனப்பிரச்சினையை உருவாக்கி விடும் என அவர் கூறியதாகவும், பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிமை நேரடியாக சந்திக்க அவர் ஆலோசனை தெரிவித்ததாகவும் ஃபாரோஸ் மேலும் கூறினார்.

தலைநகர், ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நேற்று நடைபெற்ற மடானி பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பேசும்போது அவர் இவ்வாறு கூறினார்.

பிரதமர் இந்த அடிக்கல் நாட்டு விழாவை அதிகாரப்பூர்வமாக நடத்தினார்.

சுமார் 12,142 சதுர அடி அளவிலான நிலத்தில் பள்ளிவாசலை நிர்மாணிப்பதற்கான முயற்சிகள் கடந்த 2009 இல் ஆரம்பமாயின. ஜேக்கல் நிறுவனத்திற்கும் கோலாலம்பூர் மாநகர் மன்றத்திற்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இதன் விளைவாக, 2012 ஆகஸ்ட் 6 ஆம் தேதி அதிகாரப்பூர்வ அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டது. தொடர்ந்து 2012 ஆகஸ்ட் 8 ஆம் தேதி 10 விழுக்காடு முன்பணமும் செலுத்தப்பட்டது. அதையடுத்து 2014 இல் மாநகர் மன்றத்துடன் விற்பனை, கொள்முதல் உடன்பாடு செய்யப்பட்டது. அப்போது மீத பணமும் செலுத்தப்பட்டது என்று ஃபாரோஸ் விளக்கம் அளித்தார்.

அங்கு பள்ளிவாசல் நிர்மாணிப்பதற்காக 2019 ஜூலை மாதம் கூட்டரசுப் பிரதேச இஸ்லாமிய சமய இலாகாவிடம் (ஜாவி) விண்ணப்பதை ஜேக்கல் சமர்ப்பித்தது. அதைத்தொடர்ந்து, 24 நாட்களுக்குப் பிறகு 2019 ஜூலை 26 ஆம் தேதி பள்ளிவாசல் நிர்மாணிப்பிற்கு அங்கீகாரக் கடிதத்தை ஜாவி வழங்கியது என்றார் அவர்.

அதே ஆண்டில் டி.ஓ. எனும் மேம்பாட்டு உத்தரவு விண்ணப்பம் மாநகர் மன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு, 2020 பிப்ரவரி 12 ஆம் தேதி அது அங்கீகரிக்கப்பட்டது.

2021 ஜூன் 17 ஆம் தேதி, கட்டடத்தை எழுப்பும் திட்டத்திற்கான அனுமதி மாநகர் மன்றத்திடமிருந்து பெறப்பட்டது. இந்த அனுமதி இன்றைய நாள் வரையில் பல தடவை புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது. பொறுமை மற்றும் நிலையான தலைமைத்துவம் இன்றி மடானி மஸ்ஜிட் கட்டும் இந்தத் திட்டம் நிறைவேறியிருக்காது.

இந்த முயற்சி பல்வேறு சவால்களை சந்தித்தது என்பதில் ரகசியம் ஏதும் இல்லை. எனினும், இன்று பிரதமரின் தலைமைத்துவத்தின் கீழ் மாற்றத்தை பார்க்க முடிந்தது. வெறும் வாக்குறுதி மட்டுமல்ல, அது நிறைவேறவும் செய்தது என்று ஃபாரோஸ் குறிப்பிட்டார்.

சுமார் 11 ஆண்டுகள் நாங்கள் பொறுமையுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். இறுதியில், மாண்புமிகு அவர்களே (பிரதமர்) நீங்கள் சாதித்து விட்டீர்கள். நீங்கள்தான் அந்த மனிதர். அதற்காக டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிமிற்கு நான் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அவர் இன்றி இந்த நிகழ்ச்சி இன்று நடந்திருக்காது என்று ஃபாரோஸ் மேலும் கூறினார்.